1993 அக்டோபர் 28]

(ஈ) நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண். 31/1993), மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 31/1993) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

7. அரசினர் தீர்மானம்,—தொடர்ச்சி.

(ஆ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் 1-15

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''சட்டமன்றப் பேரவை விதிகள் 30,130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனிஅலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 36/1993) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்''
என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுகம் செய்கிற ஒரு சட்ட முன்வடிவை பிரத்தியேகமாக அவை முன்னவர் அவர்கள் சொல்லி அன்றைக்கே சட்டமாக்குவது என்பது மரபாக இல்லை என்று நான் கருதுகிறேன். எனவே அப்படிச் செய்யலாமா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

---

*27—10—1993 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நகராட்சி மன்றங்களினுடைய தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டிக்கிற ஒரு சட்டத்தை, ஏற்கெனவே நேற்றைக்கு அறிமுகம் செய்து இன்றைக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறோம், இன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியக் குழுக்களினுடைய தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டிக்கிற ஒரு சட்டமுன்வடிவை அறிமுகம் செய்திருக்கிறார். ஏறத்தாழ இந்த இரண்டு சட்டங்களுமே ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கின்றன. பொதுவாக பெரும்பகுதி உறுப்பினர்கள் நகராட்சிகளுக்காகப் பேசாமல் ஊராட்சிகளைப் பற்றித்தான் பேசுவார்கள் என்கிற காரணத்தால் அந்த ஒரு நாள் உறுப்பினர்களுக்கு, அதாவது குறிப்பிட்ட ஒருநாளாவது அறிவிப்புக்குரிய காலம் கொடுக்கிற அந்த விதியைத் தளர்த்துவதற்காகத்தான் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே தீர்மானத்தை முன்மொழிந்து இருக்கிறாரே தவிர வேறல்ல. இதுபோன்ற பல்வேறு நேரங்களில் அன்றைக்கு முன்மொழியப்பட்ட சட்ட முன்வடிவுகள் அன்றைக்கே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே இதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. அந்தச் சட்டமுன்வடிவு கூட ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு நேற்றைக்கே சுற்றனுப்பப் பட்டு இருக்கிறது. எனவே அந்தத் திருத்தம் என்ன என்பது உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும் என்ற காரணத்தால் தான் இந்த விதியைத் தளர்த்தி இன்றைக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறோம். வழக்கமாக இந்த இரண்டு சட்டத் திருத்தங்களையும் சேர்த்தேதான் இந்தப் பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம். எனவே இந்தச் சட்டத் திருத்தத்திலே வேறு ஒன்றும் இல்லை. இதுபோன்ற மரபு இருக்கிறது. பல்வேறு நேரங்களில் நாமே தளர்த்தி எடுத்திருக்கிறோம்.

திரு. ச. அழகிரி : பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஏற்றுக்கொண்டால் சரி. ஆனாலும் இது ** ** ** என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** ** ** என்று சொல்வது சரியல்ல. பலமுறை இப்படி வந்திருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொல்லியது மாதிரி நகராட்சி மன்றத்தைப் பொறுத்து திருத்தத்தை இங்கே எடுத்துக் கொள்வதற்கு அதற்குத் தகுதி வந்து விட்டது. இன்றைக்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அறிமுகப்படுத்தியதை நாளைதான் எடுக்க வேண்டும். ஆனாலும் இரண்டும் ஒரே தன்மை கொண்டதாக இருக்கிற காரணத்தாலும் இதற்காக பெரிய, பெரிய புத்தகங்களை எல்லாம் தேடிப்பிடித்துக்கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தாலும் அவரவர்கள் இரண்டையும் சேர்த்தே பேசுவதில் சங்கடம் இல்லை என்ற காரணத்தாலும்தான் இது அவையின் அனுமதி பெற்றுத்தான் இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறதே தவிர அனுமதி பெறாமல் எடுத்துக்கொள்ளவில்லை. அந்த அனுமதிக்காகத்தான் நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். தீர்மானம் அனுமதிக்கப்பட்டதற்குப் பிறகு அது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிப் பலமுறை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. உறுப்பினர் சொல்வதுபோல் இருந்தால் அந்த ஒரு திருத்தத்தை மட்டும் நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறோம் என்றால் பல உறுப்பினர்கள் இந்த இரண்டாவது திருத்தத்தின்மீது தான் பேசப்போகிறார்கள். அப்போது இது தொடர்பு இல்லாதது என்று நானே சொல்லி அவரை நிறுத்த வேண்டியிருக்கும். ஆகவேதான் இதைத் தள்ளுகிறோமே தவிர வேறல்ல.

நான் ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு **** என்று சொல்வது சரியல்ல. எனவே அந்த ** என்பது அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது

திரு. ச. அழகிரி : எல்லாவற்றையும் நீக்கிவிடுவது—உங்கள் தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் **** என்று சொல்வது ஒன்றும் முறைகேடானதல்ல. அது அவைக்குறிப்பில் இருக்கலாம். நம்முடைய முந்தைய சட்டமன்றக் குறிப்பிலே பார்த்தால் பெரிய விஷயங்களை எல்லாம் அவை முன்னவர் அவர்கள் பேசி இருக்கிறார்கள். பல்வேறு விஷயங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அதாவது அவையெல்லாம் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே என்ன வருகிறது என்றால் நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள். அது **** என்று சொல்கிற வகையில் பேரவைத் தலைவர் மீதே அப்படி உள் நோக்கம் கற்பிக்கிற காரணத்தால்.......

திரு. ச. அழகிரி : அதை உள் நோக்கத்தோடு நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிச் சொன்னதால் தான் நான் அதை அவைக்குறிப்பிலே இருந்து நீக்கி இருக்கிறேன். இதில் வேறு ஒன்றும் இல்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை.)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

(ஈ) நகராட்சிய சட்டங்களுக்கான (திருத்த) சட்ட முன்வடிவு—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண், 36/1993) மீதும் உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

பிற்பகல் 1–20

இப்போது நேரம் 1-20 இந்த சட்டத்திருத்தத்தில் எல்லா உறுப்பினர்களும் பேசி முடித்து அமைச்சர்களும் பதில் சொல்லி, எல்லோரும் சாப்பிடவும் செல்ல வேண்டும். முதலில் பேசுகின்ற உறுப்பினர்கள் அதிக நேரம் எடுத்துக் கொண்டு மற்ற உறுப்பினர்கள் பேசி அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற வரையிலும் காத்திராமல், சில நேரங்களிலே வீட்டிற்குப் போவதுமுண்டு. எனவே அதையெல்லாம் மனதிலே கொண்டு, பேசுகின்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஐந்து ஐந்து நிமிடங்களில் பேசி முடித்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பேசுகின்ற உறுப்பினர்கள் இந்த இரண்டு சட்ட முன்வடிவுகள் மீதும் பேசலாம். திரு.கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாநகராட்சி, நகராட்சி, பஞ்சாயத்துக்களினுடைய தனி அதிகாரிகளுடைய நியமனத்தில் மீண்டும் 6 மாதம் காலம் நியமனத்தை அதிகப் படுத்திக்கொண்டு வந்துள்ள இந்த சட்டத்தில், இப்போது இருக்கிற பஞ்சாயத்துக்களில், நகரசபைகள், மாநகராட்சி களில் தனி அதிகாரிகள் தங்களது இஷ்டம்போல் இப்போது புதிதாக வீட்டுவரிகள், தண்ணீர் வரிகள் என்று போட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருக்கிற சபைக்கு வந்த பிறகு, அவர்கள் எடுக்கின்ற முடிவையே இவர்களும் தன்னிச்சையாக இப்போது எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்

கோவை மாநகராட்சியில் இப்போது 100 மடங்கு வீட்டுவரி வசூலிப்பதற்கான ஒரு நிலையை உண்டுபண்ணி ஒரு மாத காலத்தில் எல்லா இடங்களிலும் வசூல் செய்வதற்காக தனி